மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (3-7-2009) வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-17 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

- ஏதுமில்லை -

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

69. மானியக் கோரிக்கை எண் 45- சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2009-2010. (தமிழ், ஆங்கிலம்)

70. சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2009-2010. (தமிழ், ஆங்கிலம்)

71. சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய "மக்கள் சாசனம்", 2009. (தமிழ், ஆங்கிலம்)